**செய்தி வெளியீடு எண் : 201** **நாள்: 03.02.2022**

# செய்தி வெளியீடு

பதிவுத்துறையில் இந்த நிதியாண்டில் ஜனவரி 2022 வரை வருவாய் ரூ.10785.44 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருவாய் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடும்போது அதிகமாகும். உதாரணமாக 2018-19 நிதியாண்டில் ஜனவரி 2019 முடிய வருவாய் ரூ.8937.45 கோடி; 2019-20 நிதியாண்டில் ஜனவரி 2020 முடிய வருவாய் ரூ.9145.06 கோடி; 2020-21 நிதியாண்டில் ஜனவரி 2021 முடிய வருவாய் ரூ.7927.3 கோடி ஆகும்.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தலைமையில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் மற்றும் பதிவுத்துறை தலைவரால் அனைத்து மண்டலங்களிலும் பதிவுத்துறையின் பணி சீராய்வு கூட்டங்களும் காணொலி காட்சி மூலம் வாராந்திர கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அக்கூட்டங்களில் அரசின் வருவாயை எவ்வித விடுதலும் இன்றி வசூலிக்க முழு கவனம் செலுத்த வேண்டும் என்றும், சரியான ஆவணங்களை தாமதமின்றி பதிவு செய்தல், பதிவு செய்த அன்றே ஆவணங்களை விடுவித்தல், தணிக்கை இழப்புகளை வசூலித்தல் ஆகியன பின்பற்றப்பட வேண்டும் எனவும் கண்டிப்பான அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக பேரிடர் ஏதும் இல்லாத காலத்தில் பெறப்பட்ட வருவாயினை விட கடந்த ஜனவரி மாதத்தில் பதிவுத்துறையின் வருவாய் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**